**செ.வெ.எண்-40** **நாள்-24.07.2019**

# அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளே தயாரிக்கும் மரசெக்கு எண்ணெய் விற்பனையினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நபார்டு வங்கி நிதியுதவியுடன், டால்மியா சிமெண்ட் நிறுவனம் மேற்பார்வையில் அரியலூர் மாவட்ட காய்கறி விவசாயிகள் உற்பத்தி நிறுவனம் இணைந்து தயாரித்த மரசெக்கு எண்ணெய் விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் தொடங்கி வைத்தார்

அரியலூர் மாவட்ட காய்கறி விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் 2016 தொடங்கப்பட்டு, நபார்டு வங்கி மற்றும் டால்மியா சிமெண்ட் நிறுவனம் மேற்பார்வையில் 2013 கம்பெனி சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டு, 400 விவசாயிகளை கொண்டு இயங்கி வருகிறது. அரியலூர் பேருந்துநிலையம் செட்டி ஏரி அருகில் வேளாண்மை மற்றும் வேளாண்மை பொறியியல் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் உதவியுடன் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சத்திற்கு மானியமாக பெற்று, மரசெக்கு எண்ணெய் இயந்திரம், மாட்டுத்தீவனம் தயாரிக்கும் இயந்திரம், மிளகாய் அறவை இயந்திரம் மற்றும் கடலை உடைப்பு இயந்திரம் ஆகிய வேளாண்மை மதிப்புக்கூட்ட இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மையத்தில் மரசெக்கு எண்ணெய் வகைகள், மசாலா பொருட்கள், சிறு தானிய மாவுப்பொருட்கள் நேரடியாக விவசாயிகளிடமிருந்து பெற்று மதிப்புக்கூட்டி, அரியலூர் அரிமா என்ற தரத்தின்பெயரில் விற்பனை செய்து கொண்டு வருகிறார்கள். மாதம் ரூ.50,000/- முதல் ரூ.1 இலட்சம் வரை விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் விவசாயிகளின் வருமானம் இரண்டு மடங்குகளாக உயர்கின்றன. மேலும், இந்த விற்பனையை ஊக்குவிக்கும் வண்ணமாக அனைத்து அரசு அலுவலகங்களிலும் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்ட காய்கறி உற்பத்தியாளர் விவசாயிகள் உற்பத்தி நிறுவன விவசாயிகளுக்கு இ-அடங்கல் செயலியினை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் நீர் மேலாண்மை குறித்தும் ஆலோசனைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் எல்.ஜி.நாகநாதன், வேளாண்மை இணை இயக்குநர் பழனிசாமி, இளநிலை பொறியாளர் பெ.பச்சைமுத்து, நபார்டு வங்கி மேலாளர் எல்.எஸ்.நவீன்குமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், டால்மியா சிமெண்ட்ஸ் ப.பாரதி, ஆர்.சுதாகர், அரியலூர் உற்பத்தியாளர் நிறுவன இயக்குநர்கள் ஆர்.இராஜகோபால், ஆர்.சுதாகரன், அண்ணாமலை மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**